
# தவறுகள் தொடர்கின்றன...



மைதிலி தயாபரன்

# தவறுகள் தொடர்கின்றன...

# தவறுகள் தொடர்கின்றன...

- மைதிலி தயாபரன் -

வெளியீடு:
**கிருஷ்ணிகா வெளியீட்டகம்,**
வவுனியா

# தவறுகள் தொடர்கின்றன...
(கவித்தொகுப்பு)

எழுதியவர் : மைதிலி தயாபரன்
மின்னஞ்சல் : maithilieet@yahoo.com
பதிப்புரிமை : எழுத்தாளருக்கே
வெளியீடு : கிருஷ்ணிகா வெளியீட்டகம்,
வவுனியா.
முதற் பதிப்பு : 01-08-2015
அட்டைப்படம் : சுந்தரலிங்கம் தனரூபன்
அச்சுப் பதிப்பு : வாணி கணனிப் பதிப்பகம்
விலை : ரூபா 150

**THAVARUKAL THODARHINRANA**
(KAVITHOKUPPU)

Author : Maithiliee Thayaparan
E- mail : maithilieet@yahoo.com
Copy Rights : For Author
Publication : Kirushnika Publication, Vavuniya
First Edition : 01-08-2015
Cover Page : Suntharalingam Thanarupan
Printers : Vaani Computer Printing Centre
Price : Rs.150

ISBN : 978-955-41614-6-7

அறிந்தும் அறியாமலும்
அடுத்தவர்க்கு அடாததை செய்துவிட்டு
அமைதியின்றி தவித்துழலும்
அனைத்து மனித நெஞ்சங்களுக்கும்
அடக்கத்துடன்
இந்நூல்

**சமர்ப்பணம்.**

# ஆசிரியரின் ஏனைய நூல்கள்

1. வாழும் காலம் யாவிலும் (நாவல்)
2. சொந்தங்களை வாழ்த்தி (நாவல்)
3. விஞ்சிடுமோ விஞ்ஞானம் (கவிதை)
4. நான்கு அறைகள் (நாவல்)
5. வீடுகளில் மின்சக்தி விரயமாவதைக் குறைப்போம்
6. அநாதை எனப்படுவோன் (நாவல்)
7. சீதைக்கோர் இராமன் (மரபுக்கவிதை)

# அணிந்துரை

"கவியினூடாகப் பல விடயங்களையும் முன்வைத்த போது, யதார்த்தமான ஒரு சில விடயங்களை சிந்தனைக்கு எடுத்துக் கொள்ளும் விதமாக ஒரு கவிதைத் தொகுப்பை எழுத வேண்டுமென்று தீர்மானித்தேன்" எனத் தன் என்னுரையில் குறிப்பிட்டு, புதுக்கவிதையில் ஒரு புது முயற்சியாக மூன்று வரிகளை மட்டும் கொண்ட நூற்று எண்பத்துநான்கு கவிதைகளை "தவறுகள் தொடர்கின்றன..." என்ற இக்கவிதைத் தொகுதியில் தந்திருக்கிறார் கவிஞர் மைதிலி தயாபரன்.

"விஞ்சிடுமோ விஞ்ஞானம்" என்ற கவிதைத் தொகுப்பின் மூலமாக தமிழ் இலக்கிய நெஞ்சங்களில் இடம் பிடித்துக் கொண்டவர் இந்த இரண்டாவது தொகுதியிலும் வித்தியாசமாக ஒரு முயற்சியைச் செய்துள்ளார். மூன்று வரிகளில் கவிதை படைக்கும் போக்கு நம் முன்னைய இலக்கியங்களிற் காணப்பட்டது. அது 'சிந்தியல்' என்ற வடிவமாகக் கொள்ளப்பட்டது. இரண்டு அடிகளில் திருக்குறளும் மூன்று அடிகளில் சிந்தியலும் நான்கு அடிகளில் வெண்பாவுமென முற்காலத்தில் இருந்த வழக்கு, இன்று மீண்டும் மைதிலி தயாபரனால் மூன்று அடிகளில் பின்பற்றப்பட்டுள்ளது.

சிந்தியல் வழக்குக்கு உதாரணமாகக் குறிப்பிடக்கூடிய கவிதை வடிவங்கள் தற்போது இல்லை என்றே கூறவேண்டும். இதேவேளை யப்பானிய ஹைக்கூ என்ற கவிதை வடிவம் தற்போது தமிழ்க் கவிதை உலகில் அதிகம் பேசப்படுகின்றது. முதல் இரண்டு வரிகளுக்கும் பொருத்தமில்லாது, முற்றிலும் வேறுபட்ட மூன்றாவது அடியினூடாக சிந்திக்க வைக்கும், கருத்துக்களைத் தருவன இந்த ஹைக்கூ கவிதைகள். இலங்கையில் முதல் ஹைக்கூக் கவிதைத் தொகுதியாக வெளிவந்த "கூடைக்குள் தேசம்" என்ற நூலில் கவிஞர் சு.முரளிதரன்

"ஒழுக்குக்குக்
குடத்தை வைத்தேன்
அதுவும் ஓட்டை"

என்றொரு கவிதையை எழுதியிருந்தார். அண்மைக் காலங்களில் தமது கவிதைத்தொகுப்புகளில் ஒருசில ஹைக்கூ

கவிதைகளை சில கவிஞர்கள் எழுதி இணைத்துக் கொள்கிறார்கள்.

"தவறுகள் தொடர்கின்றன " என்ற இந்தக் கவிதைத் தொகுதியிலும் மைதிலி மூன்று வரிகளின் மூலமாக, ஒன்றுக் கொன்று தொடர்பான கவிதைகளினூடாக, "பிறந்த நாள் முதல் சராசரி ஆயுட்காலமாகிய அறுபத்தைந்து ஆண்டுகள் வரை அறியாமற் செய்து கொள்ளும் ஒருசில விடயங்கள் கருத்தில் நுழைந்தன. அவற்றை அறுபத்தாறு பக்கங்களில் ஓர் ஒழுங்காக எழுதிப் பார்த்தேன்" எனக் குறிப்பிட்டுத் தந்துள்ளார். ஒரு காவியம் போல பிறப்பு, குழந்தைப் பருவம், படிப்பு, குடும்ப வாழ்க்கை, முதிர்வு, உதிர்வு என சராசரி மனிதனில் வாழ்வியலைப் படம்பிடித்துக் காட்டியுள்ளார்.

தவறுகள் குற்றங்களல்ல என்பர். தவறுகள் மன்னிக்கப் படலாம். குற்றங்கள் தண்டிக்கப்பட வேண்டும் என்பர். கவிஞரும் "தவறுகள் செய்வதற்காக உருவெடுத்த மனித சமுதாயத்திற்கு, அறியாமற் செய்யப்படும் தவறுகளைப் பற்றி சிந்திக்க வைப்ப தற்காக இதை எழுதினேன்" என்னும்போது வாசகனும் ஒரு கணம் சிந்திக்க வேண்டும் என்பது உணரப்படுகின்றது.

"படிப்புக்குப் பொருத்தமாக
தொழில்தர மறுக்கும்
மூன்றாந் தர நாடு"

என்ற வரிகள் மூன்றாம் தர நாட்டைச் சேர்ந்தவர்கள் ஆழமாகச் சிந்திக்க வேண்டிய வரிகள். படிப்புக்கு ஏற்ற வேலையில்லாத கீழுழைப்பு நிலைமையின் தாக்கத்தை இந்த மூன்று வரிகளுள் சிறப்பாகச் சொல்லியிருக்கின்றார்.

"இயலாமை, ஆற்றாமையிலும்
இன்முகத்துடன் சொல்லும்
இந்தநாள் இனிய நாள்"

எமது போலியான, பகட்டான வாழ்க்கையைத் தோலுரித்துக் காட்டும் வரிகள். எத்தனையோ இன்னல்களும் இடையூறுகளும் இடைவிடாத துயரங்களும் தொடர்ந்தபோதும் நடித்து வாழப் பழகிவிட்ட எமது நாகரிகம். சிந்திக்க வைக்கிறார் கவிஞர்.

"இருட்டிய அறைக்குள்ளே
அச்சமற்ற உறக்கத்தில்
அமைதி இருப்பிடம்"

எனக் கருவறையைக் காட்டிய வரிகள். வெளிச்சம் எவ்வளவு இருந்தபோதும் உறக்கம் அச்சத்தோடு, நிம்மதி, அமைதி தொலைத்த ஒவ்வொரு ஜீவனும் அனுபவிக்க இனிமுடியாத போதும் அந்தச் சுகத்தை உணர்ந்து கொள்ளலாம்.

"தொலைந்தது குதூகலம்
புத்தகத்துள்ளே முகம்
பரீட்சைக்கு ஆயத்தம்"

இன்றைய கல்வி முறைமை. மகிழ்ச்சியை மறந்து, புத்தகப் பூச்சிகளாக மாறிய எம் குழந்தைகளின் கல்வியின் போக்கை துல்லியப்படுத்தியுள்ளார் மைதிலி.

பிள்ளைகளின் கல்வியில் பெற்றோர்கள் இன்று காட்டும் அதீத அக்கறையை கவிஞர்

"விழிமூட மறுத்திட்ட
பெற்றோரின் இமைகள்
கண்விழித்துப் படிப்பு"

எனக் காட்டுவது இன்றைய யதார்த்தத்தின் படப்பிடிப்பு. பிள்ளை படித்துக் கொண்டிருக்கும்போது தேவையான உணவு, தேநீர் போன்றவற்றை வழங்குவதற்காக பெற்றோர் தாமும் தூங்கா திருப்பது பிள்ளையின் படிப்பிற்கான உந்துவிசை என்பதைக் கவிஞர் காட்டியிருப்பது இன்றைய காலத்தின் தேவை.

உலகில் எந்த நாட்டிலும் இல்லாத சிறப்பு இலங்கைத் திருநாட்டுக்குண்டு. அதுதான் இலவசக் கல்வி எனது தெய்வம் சீ.டபிள்யூ.டபிள்யூ.கன்னங்கரா என ஒருவர் கூறியது எனது நினைவுக்கு வருகிறது. இலவச சீருடை, இலவச நூல், இலவச உணவு.. ஆனால் இன்றைய ஆய்வுகளின்படி பெற்றோர்கள் அதிகமாகக் கல்விக்காகச் செலவு செய்யும் நாடு இலங்கைதான். இதனை கவிஞர் மைதிலி,

"காசுக்குப் படிப்பு
இலவசக் கல்விதந்த
இலங்கைத் திருநாட்டில்"

என்று கூறியிருப்பது, இலவசக் கல்வியைப் பெற்று, காசுக்குத் தங்கள் கல்வியை விற்கும் ஒவ்வொருவருக்கும் சாட்டையடி.

"வரவில்லாமல் செலவுகள் செய்து மகிழ்ந்திருந்தோமே
வாழ்க்கைத் துன்பம் அறிந்திடாமல் வாழ்ந்துவந்தோமே"

இந்தப் பாடல் பசுமை நிறைந்த நினைவுகளைத் தரும் பல்கலைக் கழகத்தின் வாழ்க்கை. ஆனால் கவிஞர் இதை

"குடும்பச் சுமைகளைக்
குருடாக்கி மறைத்திட்ட
பல கொலைக் கழகம்" என்று காட்டியுள்ளார்.

கவிஞர் மைதிலி என்னுரையில் தத்துவார்த்தமான பல விடயங்களைக் கனமாகக் காட்டியுள்ளார். ஒவ்வொரு தாக்கத்திற்கும் சமனும் எதிருமான மறுதாக்கம் எனும் நியூட்டனின் விதிபோல வாழ்க்கையிலும் உண்டா? என்பதாக, தவறுக்கும் எதிர்விளைவுகள் இருக்க முடியுமா? அப்படியாயின் தவறுகளை மன்னிப்பதாக நாம் ஏன் நினைக்கிறோம்? என்றொரு ஆழமான கேள்வியை கேட்கிறார். இந்தத் தவறுகள் தொடர்கின்றன.. என்ற கவிதைத் தொகுப்பின் முடிவுக் கவிதையிலும் வாசகரைத் தூண்டுகிறார்.

"வினைகளை விரிவாக்கும்
விபரீத எண்ண ஓட்டம்
தொடரும் என் யாத்திரை.."

என்று இறுதியாக முடித்திருக்கிறார். தொடரவேண்டும் இவர் கவி யாத்திரை என வாழ்த்துவோம்

**வித்தியாரத்னா ந. பார்த்திபன்**
விரிவுரையாளர்- தேசிய கல்வியியற் கல்லூரி
வவுனியா

# என்னுரை

இலக்கிய உலகிலே வெளிவரும் எனது ஆறாவது புத்தகமும், இரண்டாவது கவிதைத்தொகுப்பும் இதுவாகும். எனது "வாழும் காலம் யாவிலும்", "சொந்தங்களை வாழ்த்தி" என்ற இரு நாவல்களும் "விஞ்சிடுமோ விஞ்ஞானம்" என்ற கவிதைத் தொகுப்பும் ஏற்கெனவே கடந்த ஆண்டில் வெளிவந்தன.

கவியினூடாகப் பல விடயங்களையும் முன்வைத்தபோது, யதார்த்தமான ஒரு சில விடயங்களை சிந்தனைக்கு எடுத்துக் கொள்ளும் விதமாக ஒரு கவித்தொகுப்பை எழுத வேண்டும் என்று தீர்மானித்தேன். தவறுகள் செய்வதற்காக உருவெடுத்த மனித சமுதாயத்திற்கு, அறியாமற் செய்யப்படும் தவறுகளைப் பற்றி சிந்திக்க வைப்பதற்காக இதை எழுதினேன்.

பிறந்த நாள் முதல் சராசரி ஆயுட்காலம் ஆகிய அறுபத்தைந்து ஆண்டுகள் வரை அறியாமல் செய்து கொள்ளும் ஒரு சில விடயங்கள் கருத்தில் நுழைந்தன அவற்றை அறுபத்தாறு பக்கங்களில் ஒரு ஒழுங்காக எழுதிப் பார்த்தேன்.

அறியாமற் செய்த பிழைகள் அதாவது தவறுகள் அப்பொழுதே மன்னிக்கப்படுகின்றன என்பதைக் கேள்விப் பட்டிருக்கின்றோம். ஆனால் தெரிந்தோ தெரியாமலோ செய்யும் அனைத்து செயல்களுக்கும் எதிர்விளைவை அனுபவித்தாக வேண்டும் என்றும் அறிந்திருக்கின்றோம். அவ்வாறாயின், தவறுகளுக்கும் எதிர் விளைவுகள் இருக்க முடியுமா? அப்படியாயின் தவறுகளை மன்னிப்பதாக நாம் ஏன் நினைக்கின்றோம்?

நாம் நல்லதாக நினைத்துச் செய்யும் எத்தனையோ காரியங்கள் உரியவர்களை அடைவதில்லை. அவ்வாறு

அடைந்தாலுமே அவர்கள் நல்லது சொல்வதில்லை. இவையும் தவறு என்ற வகையில் அடக்கப்பட்டுவிடுமா? அல்லது தப்பாகக் கணிக்கப்பட்டு தண்டனைக்கு உரியதாக்கப்படுமா?

முற்றுமுழுதாக சுயநலமாகவே நடப்பவர்கள், தாங்கள் பொது நல வாதிகள் எனக் காட்டிக் கொள்கின்றனர். அவர்கள் செய்வதும் அவர்களைப் பொறுத்தவரையில் தவறு என்று அடக்கப்பட்டுவிடுமா? ஒருவர் தனது முன்னேற்றத்திற்காகச் செய்யும் பல காரியங்கள் மற்றவரைப் பாதிக்கும் வகையில் அமைந்துவிடுமா?

தவறுவது மனிதனின் இயல்பு எனின் அதற்குரிய எல்லை எது?

இவ்வாறாக எனக்குள்ளாக எழுந்த பலவிதமான கேள்விகளுக்கும் விடையிறுக்கும் வகையில் இந்த கவிதைத் தொகுப்பை எழுதியுள்ளேன். இது பலவிதமான விளக்கப்பாடுகளை எனக்கும் மற்றவர்களுக்கும் கொடுக்கும் என்ற நம்பிக்கையில் இலக்கிய உலகிற்குள் விடுத்து அதன் எதிர்விளைவை நோக்கியபடி நிற்கின்றேன்.

எழுத்துப் பணியில் ஈடுபடுவதற்கு என்னை ஆற்றுப் படுத்திக் கொண்டிருக்கும் என்னுடன் கூடவிருக்கும் அனைத்து உள்ளங்களுக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மைதிலி தயாபரன்**
வவுனியா, இலங்கை
14.07.2015



செய்து முடித்த மோதகத்தின்
எஞ்சிய மாவில் ஒரு உருப்படி
என்பதாக இப்படைப்பு

இருட்டிய அறைக்குள்ளே
அச்சமற்ற உறக்கத்தில்
அமைதி இருப்பிடம்

ஆழ்ந்து உறங்கியவரை
அலறி எழுப்பியது
முதற் சுவாசம்

அழகாக இருந்த பெண்ணை
அழுக்காக்கி எடுத்தது
(உடன்) பிறப்பு

அசதியில் தூங்கவேணும்
ஆறுதலைத் தொலைத்தன
அம்மாவின் இரவுகள்

ஆலயம் செல்லவிடாது
அவசரச் சட்டம் இட்டது
அரைமூன்று திங்கள்

நல்ல கன்றாக தோற்றம்
நாலு காலிலே ஓட்டம்
நடுக்கம் கண்டு நின்ற பாட்டி


இல்லத்திற்குள் சுனாமி
இங்கும் அங்கும் பொருட்கள்
இடையில் அம்மா நித்திரை

எழுந்து நடந்ததின் விளைவு
எதையும் அறியாத தவறு
குழந்தையின் வளர்ச்சி



பெரியோரெல்லாம் சிறியோராக
வார்த்தையில் ஒருமை
கிளி போல் பேச்சு

அண்ணாவுடன் சமர்
அங்கும் இங்கும் வாரியிறைத்த
அழகுப் பதுமைகள்



தவறிடும் வார்த்தைகளிற்
தவறாமற் கேட்டுநிற்கும்
திக்காய்த் திக்கும்

உணர்ச்சிப் பெருகிட்டால்
உள்ளம் தடுமாறிவிடும்
அருவியாக உண்மை

உடன் வந்துநின்றால்
உற்றவிடத்திலும் தவறு
அண்ணனுக்குத் தம்பியாக

எழுந்து நடந்ததில்
வாழ்வைக் கொண்டோடியது
வளைத்து வந்த ஈ

தப்பித் தவறி விழுகையில்
தப்பாகச் சாய்வு
பதம் பார்த்த (அண்ணாவின்) தலை

மறைவாய்ப் பின்னாற் போட்டு
துரத்தி அடித்த குலை
மலையாக முந்திரிகை

விரயமின்றிக் கிழித்திட்ட
விழாச் சட்டைகள்
விழுந்து எழுந்து நடை

சத்தங்கள் எழுப்பவெனச்
சித்தமாகிய அடி
அப்பாவின் வயிறு

ஓடியவரைப் பிடிக்க
தட்டி விட்டு ஓட்டம்
(நண்பனின்) நெஞ்சில் உதை

கறுப்புத் துணியை எடுத்து
உலகையே மறைத்தது
கண்ணாமூச்சி

எல்லாருக்கும் ஒரு பொருள்
கட்டிப் புரண்டு சண்டை
என் கையிற் பந்து

வீசியே விட்டாலும்
நண்பன் பிடித்தபோது அடித்தேன்
பட்மின்டன் விளையாட்டு

தனக்கே ஆகவெனத்
தடுக்காமற் போட்டுநின்ற
தாயக் கட்டைகள்

கத்தியை எடுக்காமல்
தாறுமாறாக வெட்டி வீழ்த்திய
சதுரங்கக் காய்கள்

கையிற் கிடைத்த கம்பியில்
தப்பாது பட்டுக் கசிந்த
அம்மாவின் காலின் இரத்தம்



விழுந்து கிடந்தது
நண்பனின் இனிப்பு
விளையாட்டாக ஓட்டம்

புலியாக வேடமிட்டுப்
புசித்துவிட்ட மகிழ்ச்சி
தங்கையின் சிற்றுண்டி

உடைகளில் மறைந்து நின்றது
விஞ்ஞானப் புத்தகம்
நித்திரை விழிக்கப் பயம்

ஆசிரியரிடம் பிடிபட்டது
நண்பனின் விடைத்தாள்
பார்த்து எழுதியது நான்

நறுக்கெனத் தொலைந்தது
நண்பனின் புள்ளி
என் அன்னைக்குத் தப்ப

விரைந்து அழிந்திட்ட
வினாடிவினாக் கேள்விகள்
விட்டத்தில் பார்வை



முண்டியடித்தபோது விழுந்து
முடமான நண்பர்கள்
முன்னால் என் பயணம்

விரும்பிப் பெற்றிட்ட
வெற்றிக் கோப்பை
விளையாட்டே வினை

இருட்டில் இழுத்து வழிகாட்டி
முன்னேறச் செய்தது
முன்னால் பள்ளம்

ஊருடன் ஒத்து ஓட
யாவரும் மறந்துவிட்ட
சுவட்டில் ஓட்டம்



கடவுளை மறந்திட்ட
கணப்பொழுது
கண்டவிடத்து படிப்பு

தொலைந்தது குதூகலம்
புத்தகத்துள்ளே முகம்
பரீட்சைக்கு ஆயத்தம்

விரும்பும் பெண்ணுக்கு
விளையாட்டுக் காட்டவென
விழுந்தெழுந்த மைதானம்

மனமே இல்லாமல்
மடமையில் அலங்கரித்த
மனத்தின் மறுபக்கம்

அம்மாவின் பொன்னகை
வட்டிக் கடையில்
உந்துருளி ஆசை

விழிமூட மறுத்திட்ட
பெற்றோரின் இமைகள்
கண்விழித்துப் படிப்பு

விலைவாசி பார்க்காமல்
சத்துமா எனக்கு
விருந்துடன் மறக்காமல்

வந்தனை செய்துநின்ற
பெற்றோரின் ஆதரவு
வரமெனத் தரம்பெறவும்

முழுமையான பொதுத்தேர்வு
முதற்படியில் செல்வதாய்
மிடுக்குடன் எழுத்து

கடமையை மறந்துவிட்டு
கருத்துடன் படிப்பு
கல்விப் பொதுத் தராதரம்

மூடி எறிந்துவிட்ட
முதற் புத்தகம்
முடிந்ததாம் பரீட்சை


நேரம் கடந்து விட்டபோது
உடலில் வந்தநோய்
ஆரம்பம் பொய்மை

காசுக்குப் படிப்பு
இலவசக் கல்வி தந்த
இலங்கைத் திருநாட்டில்

படிப்புக்கும் பார்வைக்கும்
படுபயங்கரப் போராட்டம்
கட்டிளம் வயதில் நான்

நண்பனுக்குத் தியாகம்
படிப்புக்காக நான்
காதலுக்காக அவன்

எதிர்கால ஒளியதனை
எம்மவர்க்குக் காட்ட மறுத்த
என் கைவிளக்கு



பிரியாத நண்பரை
பிரித்திட வந்திட்ட
பெறுபேற்று அட்டவணை

பெறுபேறு கிடைத்தபோதும்
பெருமைப்பட மறுத்த
பெற்றோரின் வறுமை

தொழில் தொடங்குமுன்
பழியாய்த் தொடங்கிய
பலரது கண்ணோட்டம்

கடன்காரன் ஆகிவிட்ட
அப்பாவின் பிழைப்பு
மகன் கல்விமான்

பரம்பரைக் காணி காசானது
பல்கலை கற்வெனக்
கழகம் புகுந்த ஏழை

காசை எடுத்தபோது
கடமையுடன் திணித்திட்ட
அக்காவின் திருமணம்

தற்காலிக சுதந்திரத்தில்
தாம் தூம் செலவுகள்
தூரத்தில் நான் படிப்பிற்காய்

குடும்பச் சுமைகளை
குருடாக்கி மறைத்திட்ட
பல கொலைக் கழகம்

எனக்கு இளையவளை
சிரேஷ்டரெனச் சொல்லிட்ட
பொதுப் பரீட்சை முடிவு

மாணவர்க்குத் தலைமையாய்
மறைந்துநின்ற அரசியல்
மற்றவருக்காக நான்

கொட்டும் வறுமையிலும்
கொழு கொழு கொய்யகம்
மற்றவர் பார்வையில் அவள்

விட்டுக் கொடுப்பதால்
அடி மட்ட முட்டாள்
கழகத்தில் பட்டம்

பெண்ணைப் பார்த்திட்டால்
பேயும் ஓடிவிடும்
பல்கலைக்கழக வளாகத்தில்

ஆடிடவும் பாடிடவும்
அவசர மூச்சும் மறந்த
அந்த இறுதி நாட்கள்



படிப்புக்குப் பொருத்தமாய்
தொழில்தர மறுத்திடும்
மூன்றாம் தர நாடு

காகிதத்துடன் படிகளை
ஏற இறங்க வைத்த
தொழில் தேடும் படலம்

படிக்காத படிப்புக்கும்
செய்யாத தொழில் சிபாரிசு
தொழிற்சந்தையில் நான்

கல்வி முடிந்து பட்டம்
வரிசையில் வந்துகுவியும்
கடன்கொடுத்தோர்

என்னை வாங்கவென
விலைபேசி வந்திட்ட
எண்ணிறைந்த உறவுகள்

பணத்துடன் பெண்ணையும்
நாடிவிட மறுத்திட்ட
தொழில் பஞ்சம் இங்கு

பூசி மினுக்கியவளைப்
பொய்யாகப் பார்த்துவந்த
பெண் பார்க்கும் படலம்

பிடித்திருக்கும் பலதையும்
பார்க்காமல் சொல்ல வைத்த
பெண் வீட்டார் பணம்

கயிறும் துணியுமின்றிக்
கட்டிவிட இறுக்கமான
கல்யாண மாப்பிள்ளை

பட்டத்துக்கு வாலாகவே
பாராமற் பறந்து சென்றது
பள்ளியின் காதல்

உதட்டில் இருந்து வார்த்தை
அக்கினிப் பயணத்தில்
“உன்னை விட்டுப் பிரியேன்”

தேவர்கள் சாட்சி
திரிவுபடுத்திச் சொன்னது
ஓமகுண்டலத்து அக்கினி

கால்வைத்து மெட்டியிட
கல்போலே ஆகிவிட்ட
கட்டிய மனைவி

அருகில் கண்டபோதும்
அழகை உணர மறுத்த
அதிஷ்டமற்ற கண்கள்

தொலைவில் காட்டியபோது
(கை) குவிக்கவும் துணிந்த
பொய்யான அருந்ததி

மஞ்சள் நிறத்தில் தலைக்கரிசி
தம்பதியர் இருவருக்கும்
மணமேடையில்

சக்கையான படைப்பிற்கு
சடுதியான தலையங்கம்
முதலிரவு

சாந்தியில்லா வாழ்வுக்கு
கட்டியம் சொல்வைந்த
சாந்தி முகூர்த்தம்

கண்டவனுக்கு சாட்சி சொல்ல
மாப்பிள்ளை வீட்டழைப்பு
கல்யாணத்தின் மறுநாள்

பிரித்தும் சேர்த்தும்
விருப்பத்திற்கு விளையாட்டு
விளம்பரத்திற்குப் புகைப்படம்

புதிதாகக் கடன் கொடுப்போர்
பொதி செய்யப்பட்ட பெட்டி
திருமணத்தில் வியாபாரம்

விலையுயர்ந்த கயிறு
விற்ற மாட்டைக் கட்டியிழுக்க
பொன்னால் செய்ததாம்

வாங்கிய பொருளை ஏற்ற
இரவலாக கொய்யகம்
திருமண ஊர்தி

துன்பத்திற்குக் கட்டியம் சொல்ல
துணிந்த இரு பெண் திட்டல்
கையிலே நெருப்பு (ஆரத்தி)



புது இட வாசம்
புன்னகைக்கும் புதுத்திருடன்
மாமியின் வீட்டுக்கு வருகை

கைகளில் தவழ்ந்திட
கருத்துடன் வடித்திட்ட
கண்ணாடிக் கலங்கள்

கண்மூடி வைதிட்ட
என் கண்ணாடி
பட்டது என் உருவம்

பொய்பொய்யாய் பொரிந்திட
பொறுத்த வாயுடன்
பெண் வீட்டில் நான்.

அறிவுக்குப் புரிந்திடாது
அணுவாக இடம் மாறிய
என் உயிரின் பாகம்

உணர்வைத் தூண்டிவிட
உறவுக்குள் எரிமலையாய்
உதவாக்கரைப் பொம்மை

எப்போதோ பட்டகடன்
இப்போது வட்டியுடன்
பிள்ளைகளின் லீலைகள்

தங்களுக்குப் பொருள் கேட்டால்
தம்மையே வைதிட்ட
தறுதலைப் பிள்ளைகள்

நிறுவனத்தில் வேலையில்லை
சேவகன் மேலதிகாரிக்கு
அர்ப்பணிப்பான ஊழியன்

வேண்டும் இடமெல்லாம்
வேண்டியவரை கைநீளும்
விருப்பத்திற்குப் பணம்

தொழிலின் போர்வையில்
தோட்டியின் தோற்றம்
மக்களின் கண்துடைப்பு

தேர்த் திருவிழாவிலும்
தேர்ந்தெடுத்து முதலிடம்
திரைக்குப் பின்னால் பணம்

பெரிய மனிதனாய்
பெருமை கொள்ள வைத்து
பேடிக்குப் பாராட்டு

உயர்ந்த மனிதனாக
ஒதுங்கிவிடப் பெண்களும்
உலகுக்குப் பயந்து

துன்பத்தைக் குடித்துவிட்டு
இன்பத்தைக் கொப்பளிக்க
இரும்புத் திரை முகம்



இயலாமை, ஆற்றாமையிலும்
இன்முகத்துடன் சொல்லும்
“இந்த நாள் இனிய நாள்”

அடிபாட்டுக்குத் தயாராகும்
இராணுவ வீரர்கள்
மனைவியுடன் இறுக்கம்

எதிர்க்கட்சித் தலைவருடன்
எக்குத் தக்காய் வாதம்
குடும்பத்தில் பாராளுமன்றம்

தப்பித் தவறியும்
தலைவனைப் பணிந்திடாத
வணங்கா முடி மனையாள்

உலகத்துக்கு வேடமிட
உதவி மற்றவர்க்கு
உதவாத கைகளாலே

உண்டும் இல்லையும்
ஒருவருக்கொருவராக
ஒரு நூறு தலைவர்கள்

உண்மையான பலனுமின்றி
உழைத்து ஓடான
அப்பாவி ஆசிரியர்கள்

தேடுதலில் நாயாக
திரைகடல் ஓடிடவும்
கிடைத்திடாது திரவியம்

திரட்டிப் பதுக்கவென
விதவிதமாய் பீரோ
வீட்டில் வங்கிச் சேவை

விளக்கம் இன்றியே
விசித்திரமாய்ச் சேர்த்தவை
பாபங்களும் சாபங்களும்

தெரியாமல் விரல்நுழைந்தால்
கண்களை உறுத்திவிட்டுச்
சுரந்திடும் நீர்

வாய்விட்டுச் சிரிப்பும் அழுவதும்
செய்துவிட்ட தவறு
வார்த்தையில் தீட்டு

குற்றங்குறை பார்ப்பதிலும்
நிமிர்ந்து நிற்கத் தெரியாது
தலைமுடிக்கு



கடன்பட்டோன் கணக்கு முடிக்க
பத்திரத்துடன் வருகை
அப்பாவின் யாத்திரை

அருமைத் தங்கைக்கு திருமணம்
சீதனத்தின் மேலும் ஒரு
மூதனம் கொடுப்பனவு

தன்னைப் பாராது நின்றதாய்
தார்ப்பரியம் சொல்லிநின்ற
தனது ஊனவுடல்

இனிப்பை விட்டால் வாழ்வு
எடுத்தலுத்த மாத்திரை
இனிது வாழவேண்டி

உப்பிட்ட உணவு வேண்டா
உள்ளளவும் நன்றி
உரையாது நின்றதால்

வரவு வந்த மனையில்
செலவு செய்ய வந்த
வகையறான வியாதிகள்

வசதி வாட்டும்போது
வசையைப் பாட வந்த
வம்சாவழி உறவினர்கள்

நட்பின் பெயரைச் சொல்லி
நண்பராய் நாடவந்த
நல்ல நூல்கள் இழப்பு

எனது விம்பமாய்
இயங்கிட மறுத்திட்ட
என் வாரிசுகள்

நன்மைக்குத் தீமையாம்
இயற்கையின் சமநிலை
எனக்குப் பிள்ளைகள்

அன்பின் அணைவினை
அளித்திட மறந்தவளாய்
அடியேனின் மனையாள்

அமைதியைத் தொலைத்திட்டு
ஆறுதலைத் தேடி
எனது பயணம்

நட்பின் இலக்கணத்தை
நல்கிட மறந்திட்ட
நண்பர்கள் கூட்டம்

உறவின் உண்மையை
உணர்த்திடா நின்ற
உயிரான உறவுகள்



நன்றிக்குப் பெயர் சொல்லி
நாயுடன் சென்றிட்ட
நாயேனுக்கு அன்னை

நல்லதைச் செய்யவும்
நன்மையைச் சொல்லிடவும்
மறுத்த என் நாவு

பணம் பிடுங்கும் திருடன்
பாங்காகக் காரணங்கள்
பள்ளியுடையிற் பிள்ளை

வீடு கொள்ளையிட
முகமூடியில்லாத் திருடர்
மனைவிக்கு சக உதரம்

உடலில் ஒட்டிவிட்ட
பிணியாக வந்து சேர்ந்த
மாலையிட்ட மங்கை

கொடுங்கொன்மை ஆட்சியினால்
மறுமையினை நோக்கியவாறு
அன்னையின் உயிர் பயணம்

கொடுத்துச் சிவந்த கை
கொள்ளிக் குடம் சுமந்திடவே
பள்ளி செல்லும் பாலகனாய்

அன்னையின் அன்புதானும்
ஆண்டவனிடம் சென்றிடவே
அநாதையாக அங்கே

அழுதழுது சோர்ந்துவிட
அடிபணிந்து அழுதுவிட
அணைத்து வந்த கை

அவள் கையா அது !
யார் கையோ அது?
என் கைதான் உயர்ந்தது!

தன்கையே பலமாக
தன்னுணர்வு துணையாக
தாளாத சோகமில்லை

கண்களைக் கட்டிடவே
கண்ணுக்கு வெளியாகக்
காவலிருக்கும் இமை

மெய்யின் வலியகற்ற
எட்டித் துடைத்துவிடும்
கடமையின் கரங்கள்

கண்ணும் குளிர்வுபெற
தன்னில் பிசுபிசுப்பு ஏற்றும்
தலையின் உரோமம்

அதிகரிக்கும் நிறையினையும்
ஆதாரமாய்த் தாங்கிநிற்கும்
குச்சியாகக் கால்

அத்தனை நடந்திடவும்
எத்துணையும் இயங்கிவிடும்
இதயம்

கொடுமை நடந்தபோதும்
நன்மையைச் சொல்லி நின்ற
உள் நிற்கும் உணர்வு

கோபம் வந்தபோதும்
பாபத்தைச் சொல்லிடாத
பகுத்தறிவு

உள்ளமும் கனமாக
உலகமே விரோதியாக
ஊனக்கண்கள்

உண்மையின் பொய்மையில்
உள்ளதைச் சொல்லிடாத
உயர்ந்த எண்ணம்

கருத்தைச் சொல்லவெழுந்து
உதடுவரை நின்றுவிட்ட
அறிவில்லா உரைகள்



உள்ளோர்க்கு உதாரணம்
உவமைக்காய் வாழ்க்கை
அறிந்த மடமை

அனைத்தும் பொய்மையாம்
அறிவு வந்து நின்றது
அடைந்த நிம்மதி


அவர்க்கு என்றும் இவர்க்கு என்றும்
அறியாமை இடமறுத்த
அற்புத அறிவு

உறவின் நிலையாமையை
உணர்வால் சொல்லிவிட்ட
உள்ளார்ந்த அனுபவம்

பிள்ளையின் மிகைச் செய்கை
பெற்றோர் இருக்கையிலே
கற்காத பாடம்

குடும்பத்தைப் பேண வேண்டும்
குணத்தைத் தொலைத்தவனாய்
ஒருவன் மகன்

குடும்பத்தையும் சுற்றத்தையும்
ஆதரிப்பவன் எனவுரையா
ஒரு மைந்தன்



அறிவிலும் ஆர்வத்திலும்
தன்னை மீறாதவனாய்
இருக்கும் குமாரன்

தன்னை நற்கதிக்கு
அனுப்பவல்லவன் அல்லன்
புத்திரன்

பழைய கணக்குமல்ல
எதிர்கால இருப்புமல்ல
இது தனிக் கணக்கு



மனையாள் எனப்படுவோள்
மாங்கல்யம் காப்பதற்கு
துணைவியின் தனிக்கருத்து

உறவுக்கு உட்புறம்தான்
பகைமையும் தொடர்புகளும்
உற்றவரின் பாடம்

செலவுக்கே ஆகவென
வரவு வைத்து நின்ற
வசதியில்லா வளங்கள்

பொய்யான யாக்கைக்கு
'மெய்' யெனப் பெயர்சொன்ன
படித்தவன் அறிவு

கண்களைப் பறித்துவிட
கட்டவிழ்ந்து விடும்
மின்னல் வாழ்க்கை

உலகத்தைக் காணவென
உள்ளன்புடன் நோக்கிட்ட
எனக்கான உலகம்


யாவர்பாலும் அன்புகொண்டு
யாசித்திடாது நின்ற
யான் என்னும் பிறப்பு

அன்பின் திரையிலே
அதட்டலை உதிர்த்துவிடும்
அடையாத கதவு

சொல்லிய வார்த்தையிற் மயக்கம்
பொருள் கேட்டல்ல
பொருத்தம் நோக்கி

வீசிய பேச்சில் நடுக்கம்
முதலிடம் வேண்டா
கடைநிலை வாராதே

உலகை நோக்கிய பீதி
உள்ளத்திலும் இல்லானாய்
ஊருக்குள்ளே நான்



கடந்துவிடும் நாட்கள்
கலக்கத்தைக் காட்டும்
கதியற்றவனாய் நான்

படித்த பின்னும் பட்டம்
பெற்றுவிட்ட முட்டாளாய்ப்
பிள்ளைகளின் முன்னே



காற்றின் அசைவினிலே
கருத்தாவைத் தேடும்
கண்களிலே ஞானம்

பாலில் செறிந்து வாழும்
பரந்த வெண்ணெயாகப்
பரவிடும் மானம்

அடைத்திடவும் தாழில்லா
அவதியிலே வாழும்
ஆத்மாவின் தாகம்



உண்மையை உணர்ந்துவிட்ட
உறவின் ஸ்பரிசம்
அன்பிலே பிள்ளைகள்

கண்ணியத்தைக் காத்துவிடக்
கண்களில் நீர் உதிரும்
கடமை வீரனாக நான்

எடுத்த பிறவியிலும்
கொடுத்த பாடம் மறந்து
மறுமையில் பயணம்

மனிதன் ஆகிடவும்
வாழ்ந்திட மறந்த
வீணாட்களின் கனவுகள்

வினைகளை விரிவாக்கும்
விபரீத எண்ண ஓட்டம்
தொடரும் என் யாத்திரை...

**முற்றும்**

## திருமதி மைதிலி தயாபரன் அவர்கள்

மிகவும் கனதியான படைப்பிலக்கியங்களான இரண்டு நாவல் களினூடாக நூலுருவாக்கத் தடத்தில் வடம் பிடித்தவர்.

வசீகரமாக சொற்களை வழங்கும் இவருக்கு வார்த்தை களுக்குப் பஞ்சமேயில்லை. அடுக்கும், அடுக்கிடுக்கும், சந்தமும் சரளமாகவே கோர்த்து நிற்கும் இவரது படைப்புக்களில்.

ஏற்கெனவே வெளியிடப்பட்ட "விஞ்சிடுமோ விஞ்ஞானம்" கவிதை நூலிலிருந்து சற்று வேறுபட்டு "சட்டெனச் சுடும்" ஹைக்கூ வடிவத்தில் இதனை ஆக்கியுள்ளார்.

ஒருவனது கருவறையில் இருந்து கல்லறை வரை சிந்தனையூடே நகரும் கவிஞர் வாழ்வின் அர்த்தத்தையும் அதன் வளர்ச்சிப் போக்கில் அந்தரிக்கும் அல்லது ஆனந்தப்படும் மனித இயல்புகளையும் தன் வயதிற்கேற்ப அனுபவத்தையும் மேவியவாறு விளக்குகிறார். ஆங்காங்கே தன்னுணர்வுகள் வந்து போயினும் அந்தந்த பருவத்தில் நின்று, ஓர் ஆசிரியர் போல் அறிவுரைக்கின்றார்.

"செய்து முடித்த மோதகத்தின்
எஞ்சிய மாவில் ஒரு உருப்படி
என்பதாக இப்படைப்பு" இவ்வாறு ஒரு உயிரின் படைப்பிற்கு வரைவிலக்கணம் கூறித் தொடங்குபவர்.

"வினைகளை விரிவாக்கும்
விபரீத எண்ண ஓட்டம்
தொடரும் என் யாத்திரை"
என்று நிறைவு செய்கின்றார்.

அடுத்த கட்டத்தின் ஆதங்கத்தில் நின்று எம் சிந்தனையைச் சீண்டி விட்டிருக்கின்றார். யாவரும் ஒரு முறையேனும் பார்த்துவிட வேண்டிய புதுவகைப் புத்தகமிது.

அன்பகலாப் பிரியங்களுடன்
**வே.முல்லைத்தீபன்**

9789554161467

கிருஷ்ணிகா வெளியீட்டக வெளியீடு - 2